4, 5 இடங்களில் ஆரம்பிக்கப் போகிறார்கள் தமிழ் நாட்டில். காந்திக் கிராமம், பெரியநாயக்கன் பாளையம் இரண்டு இடங்களிலும் ஆரம்பிக்க இருக்கிறார்கள்.

SRI A. GOVINDASAMY : ரூரல் இன்ஸ்டிட்யூட், பேசிக் எஜுகேஷன் யுனிவர்ஸிடியாக அமைக்க முயற்சிக்கிறார்களா, காந்திக் கிராமத்தில் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : காந்திக் கிராமத்தில் இப்பொழுது ரூரல் ட்ரெயினிங் இன்ஸ்டிட்யூட் நடக்கிறது. எஸ்.எஸ்.எல்.ஸி. படிப்புக்குப் பிறகு, விவசாயத்தில், எஞ்ஜினியரிங்கில், சில தொழில்களில் பயிற்சி கொடுத்து, அதற்கு டிப்ளோமா பெறுகிறார்கள். ரூரல் யுனிவர்ஸிடிக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. அப்படிப் பயிற்சி பெற்றவர்கள் சில தொழில்களுக்குப் போகலாம் என்று சர்க்கார் அனுமதித்திருக்கிறது. சர்வகலாசாலையைப் பற்றி எந்தவிதமான தகவலும் இல்லை.

Trial of Police Officers for corruption

*652 Q.—SRI M. P. SARATHI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் போலீஸ் இலாகாவில் அதிகாரிகள் ஊழியர்கள் எவ்வளவு பேர் தற்காலிக வேலை நீக்கத்தில் (Suspension) இருக்கிறார்கள் ?

(ஆ) அவர்களில் இலஞ்சக் குற்றத்திற்காக விசாரணையிலுள்ளவர்கள் எவ்வளவு பேர் ?

(இ) இந்த விசாரணை அதிக பட்சம் எவ்வளவு நாட்களில் முடிய வேண்டும் என்று விதியுள்ளதா ?

(ஈ) இல்லையென்றால் அவ்வாறு விதி ஏற்படுத்த யோசனை உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The number of persons under suspension as on 31st January 1960 in the Police Department was 134.

(*b*) Twenty-three have been placed under suspension for corruption charges.

(*c*) No, Sir.

(*d*) There is no proposal to fix a time limit for such enquiries as the time required for such enquiries depends on the nature and number of allegations to be enquired into. Every effort is being made to complete the enquiries in as short a time as possible.

SRI K. ANBAZHAGAN : போலீஸ்காரர்கள், ஏற்றுக் கொண்டிருக்கும் பணியின் கடினத்தால் பெரும்பாலும் கடமை செய்யும்போதே தவறுகள் ஏற்பட்டுவிடுவது இயல்பாக இருப்பதினால் இரவு கண் விழிப்பு முதலியவைகளால் இயல்பாகவே தவறுகள் ஏற்பட்டுவிடுவதால் அவர்களைத் தண்டிக்கும் விதிகளைத் தளர்த்த இந்த நிலைமையைக் கருதி, அரசாங்கம் புனராலோசனை செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : போலீஸார் தங்கள் கடமையைச் செய்யும்போது தவறுகள் ஏற்படுகிறது இயல்பாக என்று அங்கத்தினர் கூறியதற்கு மகிழ்ச்சி தெரிவிக்கிறேன். இருந்தாலும், நடவடிக்கை எடுக்கும் விஷயத்தில், சந்தர்ப்பங்களைப் பார்த்துத்தான் தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது ; எவ்வளவு கடமை இருந்தாலும், பொறுப்பு இருந்தாலும், கஷ்டம் இருந்தாலும், தவறு செய்தவர்கள் தண்டிக்கப்படத்தான் வேண்டும்.

TRUTH ALONE TRIUMPHS

[9th April 1960

Sri M. KALYANASUNDARAM : டி.எஸ்.பி.–கள் கோர்ட்டில் எத்தனை பேர், சஸ்பெண்ஷனில் எத்தனை பேர், சஸ்பெண்ட் ஆகாமல் விசாரணையில் இருப்பவர் எத்தனை பேர்கள் என்று சொல்ல முடியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதையெல்லாம் பற்றி இப்பொழுது என்னிடம் தகவல் இல்லை.

Sri T. S. RAMASWAMI : May I know whether there is any provision in the Police departmental rules that officers facing enquiry should not be kept under suspension for more than three months—that is what I think if my memory serves me a right—and if so, are there officers who are kept under suspension for more than even a year ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I believe certain officers have been kept under suspension for longer periods than three months. But I am not aware of any such rule referred to by the hon. Member.

Sri C. NATARAJAN : தலைவர் அவர்களே, இந்த போலீஸ் சம்பந்தப்பட்ட வரை, டிபார்ட்மெண்டிலே அதிக தாமதம் ஆகிறது ; ஆகவே, கோர்டின் மூலம் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு இருக்கிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : டிபார்ட்மெண்டிலே விசாரணையை குறுகிய காலத்தில் முடிக்கவேண்டும் என்ற காலவரம்பு இருக்கிறது. அப்போதைக்கப்போது தாமதம் செய்யக்கூடாது என்று குறிப்பிடப்பட்டு வருகிறது. சீக்கிரத்தில்தான் முடிப்பார்கள். சில சமயங்களில், தவிர்க்க முடியாத தாமதம் ஏற்படுகிறது.

Sri P. G. MANICKAM : நமது சென்னை மாகாண போலீஸ் டிபார்ட்
9-00 a.m. மெண்டிலுள்ள போலீஸார்கள் நேர்மையான முறையில் நடந்து கொண்டாலும்கூட அவர்களுக்கு இருக்கக்கூடிய வறுமையின் காரணமாக தங்களுடைய குடும்பங்களின் சௌகர்யத்திற்காக ஒரு சிலர் தவறான முறையில் நடந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது. ஆகையால் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கு சர்க்கார் கவனம் செலுத்தி அதைப்பற்றி பரிசீலனை செய்வார்களா ?

Mr. SPEAKER : இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தமே இல்லை.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : வறுமைக்கும், சம்பளத்தை உயர்த்துவதற்கும் கேட்கப்பட்ட கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. தவறாக நடந்து கொண்டு தண்டனை அடைவதற்கும் சம்பள உயர்வுக்கும் சம்பந்தமே இல்லை.

Sri M. KALYANASUNDARAM : சேலம் டி.எஸ்.பி. அவர்கள்மீது 1958-ம் வருஷத்தில் குற்றம் சாட்டப்பட்டு அது இன்னும் விசாரணையில் இருந்துகொண்டே இருக்கிறது உண்மையா ? அவர் பதவியில் எங்கே இருக்கிறார் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அந்த டி.எஸ்.பி. பதவியில் தான் இருக்கிறார். அவர் இந்தியா சர்வீசைச் சேர்ந்தவர். அவர்மீது விசாரணை நடத்த வேண்டுமானால் மத்திய அரசாங்கத்தைக் கலந்துகொண்டு விசாரணைக்கு ஏற்பாடு செய்யவேண்டியதாக இருக்கிறது. அது முடிந்தபிறகு தான் அவரை பதவியில் வைத்துக்கொள்வதா அல்லது சஸ்பெண்ட் செய்வதா என்ற முடிவுக்கு வரவேண்டியதாக இருக்கிறது, இப்போதைய நிலைமையில்.

Sri K. ANBAZHAGAN : போலீஸ்காரர்கள் தவறுகள் செய்யும்போது தண்டிக்கப்படுவதில், தங்களுடைய கடமையைச் செய்யும்போது தவறுகள் நடந்தால் அதற்கு தண்டிக்கப்படுவதற்கும், சரியான முறையில்

நடந்துகொள்ளாமல் குற்றம் புரிந்தால் அதற்குத் தண்டிக்கப்படுவதற்கும் வேற்றுமைகள் இருக்கின்றன என்று கனம் அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா ? அப்படி இல்லாவிடில் அப்படிப்பட்ட தண்டனையை மாற்றி அமைக்க கனம் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : வேற்றுமைகள் இல்லை. அந்தந்த சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாற்போல் அவர்களுக்கு தண்டனை விதிக்கப்படுகிறது. தவறுகளைப் பார்த்துத்தான் தண்டனைகள் கொடுக்கப்படுகின்றன.

Sri K. B. S. MANI : இந்த போலீஸ் இலாகாவைப் பொறுத்த அளவில் சாதாரணமாக கான்ஸ்டபிள்களிலிருந்து பல மாகாண அதிகாரிகள் வரையில் இம்மாதிரியான குற்றங்கள் செய்வதாகத் தெரியவருகிறது. அதனால் அவர்கள் குற்றங்களைச் செய்யாத முறையில் அவர்கள் சரிவர நடந்து கொள்வதற்கு அவர்கள் செய்கின்ற குற்றங்களைப் பரிசீலனை செய்து எதனால் அப்படிப்பட்ட குற்றங்களைச் செய்கிறார்கள் என்று கண்டு பிடித்து அந்த அளவில் குற்றம் செய்யாது இருக்கும்படியான சௌகர்யங்களைச் செய்யும் பொருட்டு அதற்குள்ள சட்டங்களையும் விதிகளையும் மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டால் அவர்கள் குற்றங்கள் செய்யாமல் இருப்பார்கள் என்பதற்காக அதைப்பற்றிப் பரிசீலனைசெய்து அரசாங்கம் ஒரு முடிவுக்கு வருவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதைப்பற்றிப் பரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இல்லை. சந்தர்ப்பத்திற்குத் தக்கபடிதான் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. சட்டங்களைத் திருத்தி அமைக்க வேண்டியதில்லை. திருத்தி அமைக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் அப்பொழுது திருத்தி அமைத்துக் கொள்ளப்பட்டுத்தான் வருகிறது.

Sri A. GOVINDASAMY : அரசியல் குழப்பத்தின் காரணமாக அந்த குழப்பத்தை விளைவிப்பவர்களை தண்டிக்காமல் குழப்பத்தை சமாளிக்க முடியவில்லை என்ற காரணத்திற்காக தென்னாற்காடு டி.எஸ்.பி.யை மாற்றியிருப்பது உண்மைதானா ? அப்படியானால் அதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் என்ன சமாதானம் சொல்லுகிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அவ்வாறு தகவல் ஒன்றும் எனக்கு இல்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் விவரமாக அந்தச் செய்கையைப் பற்றி விளக்கம் கூறலாம்.

Teaching of English

* 653 *Q.*—Sri K. VINAYAKAM (on behalf of Sri S. LAZAR) : Will the Hon. the Minister for Finance be pleased to state whether steps have been taken to teach English from third standard ?

The Hon. Sri C. SUBRAMANIAM : No, Sir.

Adulteration of foodstuffs

* 654 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of cases that were registered for adulteration of foodstuffs in the City of Madras during the year 1958–59 ;

(*b*) the steps taken to prevent adulteration in foodstuffs ; and

(*c*) whether there is any proposal to bring in legislation to provide deterrent punishment for adulterators ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) 8,404 samples were taken. Of these 2,292 were found adulterated.